**Previous Examination date –**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure**
**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C. 80 of 2018**

**Deposition of Witness P. W. 1**

| | |
|---|---|
| **Name : நல்லம்மாள்** | **Father/Husband's Name: விஜயகுமார்** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling:** |
| **Religion:** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 04.07.2023**

**Accused A1, A2Present**

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் தற்போது கே.வேலூரில் குடியிருக்கிறேன். நான் கட்டிட வேலைக்கு செல்கிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். 26.05.2016ம் தேதி மதியம் 12.00 மணியளவில் கே.வேலூரில் எனது கொழுந்தனார் சிவலிங்கம் பெட்டி கடை வைத்துள்ளார். அந்த கடையில் என்னை பார்த்துக்கொள் என்று சொல்லி நான் வியாபாரம் பார்த்து கொண்டிருந்த போது ஆஜர் எதிரிகள் கருப்புசாமி என்னிடம் சிகரெட் கேட்டார். சிகரெட் இல்லை என்று பீடி கொடுத்தேன். பீடியை வாங்கி கொண்டு ஆஜர் எதிரி கருப்புசாமி 5 ரூ என்மீது தூக்கி எறிந்தார். நான் கையில் கொடுக்காமல் ஏன் தூக்கி எறிந்தீர்கள் என்று கேட்டதற்கு கெட்ட வார்த்தையால் திட்டி 1ம் எதிரி கருப்புசாமி என்னை காதோடு பிடித்து இழுத்தார்.

2. இழுத்ததில் எனக்கு எனது காது கிழிந்து இரத்தம் வந்தது. தோடு கீழே விழுந்துவிட்டது. காயம்பட்ட நான் சிகிச்சைக்காக பழனி அரசு மருத்துவமனையில் சேர்ந்து 10 நாள் சிகிச்சை பெற்றேன். கிழிந்த காதை தையல் போட்டு சிகிச்சை செய்தார்கள். சிகிச்சையில் இருந்த போது போலீசார் என்னை விசாரித்தார்கள். விசாரித்து வாக்குமூலம் பெற்றுக்கொண்டார்கள். தற்போது காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணை</u>**

எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை என எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் தெரிவித்தார்.

K R KALAIVANAN
Digitally signed by K R KALAIVANAN
Date: 2023.07.18 15:48:11 +0530

நீதித்துறை நடுவர்
பழனி

**Previous Examination date –**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure**
**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C. 80 of 2018**

**Deposition of Witness P. W. 2**

| | |
|---|---|
| **Name : சின்னமணி** | **Father/Husband's Name: ஆறுமுகம்** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling:** |
| **Religion:** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 04.07.2023**

**Accused A1, A2Present**

**முதல் விசாரணை**

**1. நான் தற்போது கே.வேலூரில் குடியிருக்கிறேன். பெட்டி கடை வைத்துள்ளேன். ஆஜர் எதிரிகளை தெரியும். அ.சா.1 என் கடைக்கு பக்கத்தில் கடை வைத்திருந்தவர் எனக்கு தெரியும். 26.05.2014 வருடம் மதியம் 12.00 மணியளவில் அ.சா.1 இடம் ஆஜர் எதிரிகள் 5 ரூ கொடுத்து பீடி வாங்கியது சம்பந்தமாக ரகளை ஏற்பட்டு சத்தம் கேட்டு போய் பார்த்த போது அ.சா.1 ன் காது கிழிந்து தோடெல்லாம் கழண்டு விழுந்துவிட்டது. கிழே விழுந்திருந்த அ.சா.1 ஐ துாக்கிய போது எதிரிகள் என் தலையில் அடித்து காயத்தை ஏற்படுத்தினார்கள்.இரு எதிரிகளில் யார் என்னை அடித்தார்கள் என்று எனக்கு தெரியாது. காயம்பட்ட நானும் அ.சா.1 ம் பழனி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றோம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.**

**எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணை**

எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை என எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் தெரிவித்தார்.

K R KALAIVANAN
Digitally signed by K R KALAIVANAN
Date: 2023.07.18 15:48:44 +0530

நீதித்துறை நடுவர்
பழனி